# மார்க்க அறிஞர்களின் சிந்தனைக்கு!

N.அலீ, கள்ளிடைக்குறிச்சி

அல்லாஹ் கூறுகிறான்: அவர்களையும் அல்லாஹ் வையன்றி அவர்கள் வணங்கிக் கொண்டிருந்த தெய்வங்களையும் ஒன்று சேர்க்கும் நாளில் என்னுடைய அடியார்களை நீங்கள் வழிகெடுத் தீர்களா? அல்லது அவர்கள் தாமாகவே தவறான வழியில் சென்றுவிட்டனரா என்று கேட்பான். அதற்கு அவை (சிலைகள்) நீ மிகப் பரிசுத்தமான வன்; உன்னை அன்றி நாங்கள் எங்களுக்கு பாது காப்பவனாக எடுத்துக் கொள்வது எங்களுக்கு தகுதியன்று; எனினும் நீதான் அவர்களுக்கும் அவர்களுடைய மூதாதை களுக்கும் சுகபோகத் தைக் கொடுத்தாய். அதனால் அவர்கள் உன்னை நினைப்பதையே மறந்து அழிந்து போகும் மக்களாகி விட்டார்கள்(என்று கூறும்)

இச்சிலைகள் தான் எங்களை வழிகெடுத்தன என்று கூறிய இணைவைப்பவர்களை நோக்கி நீங்கள் கூறியதை இவையே (சிலைகள்) பொய்யாக்கிவிட்டன. ஆதலால் (வேதனையை) தட்டிக் கழிக்கவும் உங்களால் முடியாது; உதவியைப் பெற்றுக்கொள்ளவும் உங்களால் முடியாது; உங்களில் எவன் அநியாயம் செய்து கொண்டிருந்தானோ அவன் பெரும் வேதனையைச் சுவைக்கும்படி நிச்சயமாக நாம் செய்வோம். (குர்ஆன் 25:17,18,19)

மறுமை நாளில் இணைவைப்பவர்கள் தாங்கள் தப்பிக்க வேண்டும் என்பதற்காக தாங்கள் வணங்கி வந்த சிலைகள் மீதே பழியைப் போட்டு இச்சிலைகள்தான் எங்களை வழி கெடுத்தன என்று கூறுவதையும் அவர்கள் கூறு வதை அவர்கள் வணங்கி வந்தவற்றை கொண்டே பொய்யாக்கப்படும் என்பதையும் மேற்கண்ட வசனங்களில் அல்லாஹ் விவரிக்கிறான்.

இணைவைப்பவர்கள் கூறுவதைப் போன்றே நபி இப்றாஹீம்(அலை) அவர்கள் கூறுவதாக குர்ஆனில் ஒரு வசனம் இடம் பெறுகிறது. இதோ: என் இறைவனே நிச்சயமாக இச்சிலை கள் மனிதர்களில் பலரை வழிகெடுத்து விட்டன. (எவன்) என்னைப் பின்பற்றுகிறானோ அவன் என்னைச் சார்ந்தவன் (எவன்) எனக்கு மாறு செய்கி றானோ நிச்சயமாக நீ மிக மன்னிக்கிறவன் மிக கிருபையுடையோன். குர்ஆன் 14:36

இப்பொழுது நபி இப்றாஹீம்(அலை) அவர் களின் கூற்றும் பொய்யாக்கப்படும் என்பதை 25:17,18,19 ஆகிய வசனங்கள் உணர்த்து கின்றன. ஏன் இந்த நிலை? நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் இவ்வாறு கூறியிருப்பார் களா? அல்லது இப்ராஹீம் (அலை) அவர்களிடத் தில் ஏற்பட்ட தடுமாற்றமா? இல்லவே இல்லை. ஏனெனில் நபி இப்றா ஹீம்(அலை) அவர்கள் தம் சமுதாய மக்களை நேரான பாதைக்கு அழைத்து இச்சிலைகளுக்கு யாதொரு நன்மையோ, தீமையோ செய்யக் கூடிய ஆற்றல் இல்லை என்பதை தன் செயல் கள் மூலமாக உணர்த்தி வாயடைத்துப் போகச் செய்தவர்கள் என்பதையும் குர்ஆனில் முறையே 21ம் அத்தியாயம் 51வது வசனத்திலிருந்து 70ம் வசனம் வரைக் காணலாம்.

இதில் 51ம் வசனத்தில் நிச்சயமாக இதற்கு முன்னரே (அவருக்கு) நல்லறிவைக் கொடுத்தி ருந்தோம் அவரின் தன்மையை நன்கறிவோம் என்று அல்லாஹ் சிறப்பித்துக் கூறுகிறான். இன் னொரு இடத்தில் (21:66,67) நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் கூறிய மணிமுத்தான வார்த் தைகள் இவை.

உங்களுக்கே யாதொரு நன் மையோ, தீமையோ செய்ய சக்தியற்ற அல் லாஹ் அல்லாதவற்றையா நீங்கள் வணங்குகி றீர்கள், சீச்சி உங்களுக்கும் கேடுதான். நீங்கள் வணங்குபவற் றிற்கும் கேடுதான்; நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டாமா?

மவ்லவிகளை நம்பி அவர்கள் பின்னால் செல்பவர்கள் குர்ஆன், ஹதீஸை பின்பற்றுகிறோம் என்பதில் பொய்யர்களே!

(குர்ஆன் 21:66,67)

நீங்கள் அல்லாஹ்வையன்றி இந்த சிலைகளைத் தெய்வமாக எடுத்துக் கொண்டிருப்பதெல்லாம் இவ்வுலக வாழ்க்கையில் உங்களுக்கிடையில் உள்ள சிநேக மனப்பான்மை தான் காரணமாகும். பின்னர் மறுமையிலோ உங்களில் ஒருவர் மற்றவரை நிராகரித்து விட்டு உங்களில் ஒருவர் மற்றவரை சபிப்பார். நீங்கள் அனைவரும் செல்லும் இடம் நெருப்புதான். அங்கு உதவி செய்ய உங்களுக்கு ஒருவருமிரார் என்று கூறினார். (குர்ஆன் 29:25)

இவ்வளவு தெளிவாக நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் கூறியிருக்க அதற்கு மாற்ற மாக 14:36ல் சிலைகள் வழிகெடுத்து விட்டன என்று கூறுவார்களா? இப்படி பல கேள்வி களோடு குர்ஆனை அணுகிய போது தான் நமக்கு அந்த அதிர்ச்சி காத்திருந்தது. ஆம்! 14:36ல் மூலத்தில் (அரபியில்) எவ்வாறு வார்த் தைகள் இடம் பெறுகிறது என்று பார்த்தால் மொழிப்பெயர்ப்பாளர்கள் மொழிப் பெயர்த் துள்ளபடி சிலைகள் என்றோ அல்லது சிலை களைச் சுட்டிக்காட்டக்கூடிய எந்த சொற் களும் மூலத்தில் இல்லவே இல்லை. ஆம் மூலத்தில் என்ன இடம் பெறுகிறது என்றால்

‘‘ரப்பி இன்னஹுன்ன அழ்லல்ன கஃதீரம் மினந்நாஸ்’’

என்றே இடம் பெறுகிறது. இதன் நேரடிப் பொருள் என்னவென்றால் “என் இறைவா மனிதர்களில் அதிகமானோர் வழிகேட்டில் உள்ளனர்’’ (எவன்) என்னைப் பின்பற்றுகிறானோ அவன் என்னைச் சார்ந்தவன் (எவன்) எனக்கு மாறு செய்கிறானோ நிச்சயமாக நீ மிக மன்னிக்கிறவன் மிக கிருபை யுடையோன். (குர்ஆன் 14:36)

என்பதே சரியானது. இப்போது எந்தக் குழப்பமும் இல்லை. ஏனெனில் இதற்கு முன்னரே நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் தன் தந்தையோடு வாதம் செய்யும்போது கூறியதை இங்கே நினைவு கூர்ந்தால் விஷயம் இன்னும் தெளிவாகிறது இதோ.

நீங்களும் உங்கள் மூதாதைகளும் தெளிவான வழிகேட்டில் தான் இருக்கின்றீர்கள். (குர்ஆன் 21:54)

இதைத்தான் 14:36ல் கூறுகிறார்கள். பிறகு ஏன்? சிலைகள் அல்லது அவைகள், இவை என்று மொழிப்பெயர்ப்பாளர்கள் மொழியாக் கம் செய்திருப்பது? புரியாத புதிராக உள்ளது. அதே சமயம் 14:35ல் “சிலைகள்” “அஸ்னாம்” என்ற வார்த்தை இடம் பெறுகிறது. அதில் நபி இப்ராஹீம்(அலை) அவர்களின் “ என்னையும் இடம் பெறுகிறது.

எனினும் 14:35ல் வரகூடிய அஸ்னாம் (சிலைகள்) என்ற வார்த்தையோ, அந்த வசனத்தை இணைக்கக்கூடிய எந்த இணைப் பும் 14:36ல் இல்லவே இல்லை. அழுத்தல் குறியீடுகள் முன்னுள்ள வசனத்தின் வார்த்தை களை இணைக்கும். அதுவும் 14:36ல் இல்லவே இல்லை. இங்கு யாரையும் குறை சொல்ல வேண்டும் என்பது நோக்கமல்ல. எனினும் சிரமேற்கொண்டு அவர்கள் செய்யும் “மொழி யாக்கம்’’ பணியில் ஏற்பட்டுள்ள கவனக் குறைவை சுட்டிக்காட்டுவதே நோக்கமாகும்.

நேர்வழி வழிகேடு இவையிரண்டிற்கும் மார்க்கம் பொதுவான ஒரு நியதியை வைத்துள் ளது. அது என்னவென்றால் இரண்டிலுமே எவ்வித நிர்பந்தமும் இல்லை என்பதுதான். நேர்வழியின் பக்கம் நிர்பந்தம் இல்லை என்பதை 18:29, 2:256, ஆகிய வசனங்களில் அல்லாஹ் தெளிவு படுத்துகின்றான். அதே போன்று வழிகேட்டின் பக்கமும் நிர்பந்தம் இல்லை என்பதையும் 14:22, 59:16 ஆகிய வசனங்களில் குறிப்பிடுகிறான். வழிகேட்டின் பக்கம் அழைப்பது மட்டும்தான் ஷைத்தா னின் பணி என்பதை அல்லாஹ் தெளிவு படுத்துகிறான். இதன் அடிப்படையில் எவர் அல்லாஹ்வின் அழைப்பை ஏற்று அவனை நம்பிக்கை கொள்கிறாரோ அவரை இருளிலி ருந்து ஒளியின்பால் அல்லாஹ் கொண்டு வருகிறான். எவன் ஷைத்தானின் அழைப்பை ஏற்று அல்லாஹ்வை நிராகரிக்கிறானோ அவனை ஒளியிலிருந்து இருளின்பால் கொண்டு செல்கிறான் என்பதையும் அல்லாஹ் தெளிவு படுத்திவிட்டான். (பார்க்க 2:257)

அல்லாஹ் நம்மனைவருக்கும் நேர்வழி காட்டு வானாக எத்தகைய கோணலும் இல்லாமல் இந்த நெறிநுலை தன் அடியார் மீது இறக்கி வைத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியது. குர்ஆன் 18:1

இதற்கு முன்னும் சரி, இதற்கு பின்னும் சரி உண்மைக்கு மாறான யாதொரு விஷயமும் அல்குர் ஆனை அணுகாது, மிக்க புகழும் ஞானமும் உடைய வனால் இறக்கப்பட்டது. குர்ஆன் 41:42

உங்களுக்கு நேரான வழியை அறிவித்து உதவி செய்ய உங்கள் இறைவனே போதுமானவன். குர்ஆன் 25:31

எவர்கள் நம்முடைய வழியில் முயற்சிக்கின்றார்களோ அவர்களை நிச்சயமாக நாம் நம்முடைய வழிகளில் செலுத்து கின்றோம்; நன்மை செய்பவர்களுடன் நிச்சயமாக அல்லாஹ் இருக்கின்றான். குர்ஆன்